எனினும் எச்.ஐ.வி. உள்ள காசநோயாளி தனது எச்.ஐ.வி. நிலையை சிகிச்சை அளிக்கும் மருத்துவரிடம் கூற வேண்டும். இது அவரை எந்த தடுப்பு மருந்தின் மூலம் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதை உறுதி செய்யவும் சிகிச்சைப் பிரிவை முடிவு செய்யவும் உதவும்.

திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்பு திட்டத்தின்படி (RNTCP) சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு முன்னர் நோயாளிகளின் முகவரியை உறுதி செய்யும் முறை உள்ளது. இதன் மூலம் சிகிச்சை எடுத்துக் கொள்ள தாமதிப்பவரை மீண்டும் சிகிச்சைக்கு அழைத்து வர முடியும். அதனால் நோயாளிகள் காசநோய் சிகிச்சை அளிப்பவர்களிடம் தங்களது உண்மையான முகவரியை கூற வேண்டும்.

தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் நோயாளிகளின் இரகசியங்களை பாதுகாப்பாக பராமரிக்கும். சிறப்பான சிகிச்சை சேவைகளைப் பெற நோயாளி தனது எச்.ஐ.வி. நிலையை தாமாக முன்வந்து சிகிச்சை அளிக்கும் மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் (NACO) எச்.ஐ.வி குறித்த ஆலோசனை மற்றும் கண்டறிவதற்கான வாய்ப்புகளை நாடு முழுவதும் உறுவாக்கியுள்ளது. நாடு முழுவதும் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவை மையங்களும், சந்தர்ப்பவாத நோய்களை கண்டறிந்து சிகிச்சையளிக்கும் மையங்களும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

எச்.ஐ.வி - காசநோய்

இந்தியாவில் 2.5 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். எச்.ஐ.வி பாதிப்பு உள்ளவர்களுக்கு காசநோய் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

காசநோய் பாதிப்புள்ளவர்களில் 1-10% பேருக்கு எச்.ஐ.வி தொற்று உள்ளது

இந்தியாவில் காசநோயால் 3 நிமிடத்திற்கு 2 பேர் மரணம் அடைகின்றனர்.

தாமதம் வேண்டாம் விரைவீர்!
காசநோயை குணப்படுத்துவீர்!

*** Download the "NACO AIDS APP"**
*** Toll Free : 1097**

பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கம்
புதுச்சேரி - 605 001.
தொலை பேசி : 0413 - 2260160, 2337000
மின் அஞ்சல் : pondicherrysacs@gmail.com
காசநோய் மருத்துவமனை : 0413-2336262

எச்.ஐ.வியும் காசநோயும்

காசநோயின் அறிகுறிகள்

மாலை நேரக் காய்ச்சல்

இரண்டு வாரங்களுக்கு மேல் தொடர்ந்து இருமல்

எடை குறைதல்

நெஞ்சு வலி

பசியின்மை

நுரையீரல் பாதிப்பு

சோர்வு, அதிகப்படியான வியர்வை

காசநோய் என்றால் என்ன?

காசநோய் என்பது மைக்கோ பாக்டீரியம் டியூபர் குளோசிஸ் என்ற நுண் கிருமியால் காற்றின் மூலம் பரவக்கூடிய நோயாகும்.

காசநோய் உள்ள நபரிடமிருந்து மற்றவர்களுக்கு காற்றின் மூலம் பரவும், ஒருவருக்கு காசநோய் கிருமி பாதிப்பு உள்ளது என்பதால், அவருக்கு காசநோய் ஏற்படும் என்பதில்லை. காசநோய் கிருமி பாதிக்கப்பட்ட நபர் அவரது எதிர்ப்பு சக்தி குறையும் போது காசநோய்க்கு ஆளாகிறார்.

அ) காசநோய் கிருமி பாதிப்பு உள்ள ஒரு எச்.ஐ.வி இல்லாத நபர் காசநோய்க்கு ஆளாக 10 சதவிகிதம் வாய்ப்பு உள்ளது.

ஆ) காசநோய் கிருமி பாதிப்பு, காசநோய் நிலையாக மாறும் ஆபத்தை எச்.ஐ.வி அதிகப்படுத்துகிறது. காசநோய் கிருமி பாதிக்கப்பட்ட எச்.ஐ.வியுடன் வாழும் நபருக்கு, அந்த நோய் நிலையை அடைய அதிக வாய்ப்பு உள்ளது.

ஒரு நபர் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டுள்ளாரோ இல்லையோ, அவர் காசநோய்க்கு சிகிச்சையை முழுமையாக எடுத்துக் கொண்டால்தான் அது குணமடையும்.

2 வாரங்களுக்கு மேல் ஒருவருக்கு தொடர்ந்து இருமல் இருந்தால் அது காசநோயாக இருக்கலாம். ஆகையால் மருத்துவரை சந்தித்து சளியை பரிசோதித்து காசநோய் இல்லை என்பதை உறுதி செய்து கொள்வது அவசியமாகும்.

திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் (RNTCP) சளி பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

நுரையீரல் (பல்முனரி) காசநோயை பரிசோதனை செய்ய மூன்று சளி பரிசோதனைகள் செய்வது அவசியமாகும். சிகிச்சை எடுக்கும் காலத்தில் சிகிச்சையின் பலன்களை அறிய ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சளி பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இவ்வாறு, சிகிச்சை, நோய் முழுமையாக குணமடையும் வரை தொடரும்.

காசநோய்க்கான மருந்துகள் நோயாளிக்கான சிகிச்சை பெட்டியில் வழங்கப்படுகிறது. இதனால் அவர் மருந்துகளை முழுமையாக எடுத்துக்கொள்வது உறுதி படுத்தப்படுவதுடன், சிகிச்சையாளரின் பொறுப்புகளையும் உறுதி செய்கிறது.

காசநோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்பவர் இதற்கான மருந்துகளை எடுத்துக் கொண்ட சில நாட்களில் குணமடைவது போன்று தோன்றினாலும், அவர்கள் சிகிச்சையை தொடர்ந்து முழுமையாக எடுத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

காசநோய் உள்ள நோயாளிகளை குணப்படுத்தும் பொறுப்பை திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டம் (RNTCP) எடுத்துக் கொண்டுள்ளது. இத்திட்டம் ஒருவரது எச்.ஐ.வி நிலையைப் பற்றி பொருட்படுத்தாமல் அனைத்து நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கிறது.